

மக்கள் உரிமைகள்
CITIZENS CHARTER

173

சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005
UNIVERSITY OF MADRAS
CHENNAI - 600 005

T4, 44, 211' P06
P06.
2.27037

UNIVERSITY OF MADRAS

Chancellor
Her Excellency the Governor of Tamilnadu
Justice Ms. M. FATHIMA BEEVI

Pro-Chancellor
Honourable Minister for Education, Govt. of Tamilnadu
Prof. K. ANBAZHAGAN

Vice-Chancellor
Prof. P.T. MANOHARAN

Registrar I/C
Prof. D. AMARCHAND

Controller of Examinations
Prof. A. SIVAMURTHY

DEANS

Dr. S. P. Thyagarajan (Univ. Indus. Inter).

Dr. R. Balasubramanian (Research)

Dr. V. K. Padmanabhan (Academic)

Dr. T. Balakrishnan (Students)

DIRECTORS

Dr. M. Shanmugam (ICE)

Dr. R. Seetharam (ASC)

Dr. V. Jayadevan (Publications)

Thiru M. R. Pandurangan (Phy. Edn.i/c)

LIBRARIAN

Dr. R. Vengan (Chepauk)

DEPUTY LIBRARIANS

Tmt. C. Rajeswari (Guindy)

Thiru P. P. Jayaraman (Marina)

Dr. R. Samyuktha (Taramani)

CAMPUS DIRECTORS

Dr. K. N. Ponnuswamy (Chepauk)

Dr. Pon Kothandaraman (Marina)

Dr. A. Mahadevan (Guindy)

Dr. M. S. Krishnamoorthy (Taramani)

WARDENS / DEPUTY WARDENS

Dr. A. Amudavalli (Chepauk)

(Marina)

Dr. P. Periakali (Guindy)

OTHER OFFICERS

Dr. Susila Mariappan (Secy., USAB)

Thiru L. Pitchandi (FO)

Thiru M. Thanikachalam, PRO (I/C)

மக்கள் உரிமைகள்
CITIZENS CHARTER

ESTD. 1857

சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005
UNIVERSITY OF MADRAS
CHENNAI - 600 005

தொலைபேசி / தொலை நகல் எண்கள்

TELEPHONE / FAX NUMBERS

Telex : 41-6376 UNOM IN

Telegram : UNIVERSITY

		TEL.	FAX	RES.
துணைவேந்தர் VICE-CHANCELLOR	:	561074	567654	4917229
பதிவாளர் REGISTRAR	:	561055	566693	4338876
தேர்வாணையர் CONTROLLER OF EXAMINATIONS	:	568496	566368	6266730
இயக்குநர், அஞ்சல் வழிக் கல்வி நிறுவனம் DIRECTOR, I.C.E.	:	562716	566368	426631

Campus Telephone Numbers

Chepauk Campus, Chennai - 600 005	:	**568778 (18 junctions)**
Marina Campus, Chennai - 600 005	:	**8571126 / 8571172 / 8544933**
Guindy Campus, Chennai - 600 025	:	**2350401 / 2351269 / 2351367**
Taramani Campus, Chennai - 600 113	:	**4925861 / 4925548 / 4925317**

சென்னைப் பல்கலைக்கழகம்

மக்கள் உரிமைகள்

முன்னுரை

தமிழகப் பல்கலைக்கழகங்களுக்கு எல்லாம் அன்னைப் பல்கலைக் கழகமாகத் திகழும் சென்னைப் பல்கலைக்கழகம் 69 துறைகளையும், 106 கலை, அறிவியல் கல்லூரிகளையும், 44 பொறியியல் கல்லூரிகளையும், 8 கல்வியியல் கல்லூரிகளையும், 7 கீழைக்கலைக் கல்லூரிகளையும், 1 உடற்கல்வியியல் கல்லூரியையும், 24 ஆய்வு நிறுவனங்களையும், 1 பட்டமேற்படிப்பு விரிவாக்க மையத்தையும் கொண்டுள்ளது. இதன் கொள்கை நிலைப்பாடுகளாவன:

- பல்வேறு துறைகளிலும் அறிவு விரிவுறச் செய்தலைத் தலைமை நோக்கமாகக் கொள்ளல்.

- புதிய அறிவுத்தேடல் முயற்சிக்குப் பின்வரும் வகைகளில் ஆதரவையும் ஊக்கத்தையும் தொடர்ந்து வழங்கல்.

  (அ) சமுதாய நிகழ்நிலைச் சார்புடைய கல்வி வழங்கல்.

  (ஆ) கல்வியில் தரமேம்பாட்டினை உருவாக்கல்.

  (இ) சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரும் உயர்கல்வி பெறுதற்கு நியாயமான வாய்ப்பளித்தல்.

- இணைப்புக் கல்லூரிகளை உயர் கல்வியில் வழிநடத்துவதோடு, தக்கவாறு அவற்றுக்கு ஊக்கமளித்தும், ஆதரவளித்தும், தேவையாயின், கற்பித்தல் போன்ற செயற்பாடுகளிலும் நிலைப்பட்ட ஒழுங்குகளின் அடிப்படையில் நெறிப்படுத்தல்.

- பல்கலைக்கழகம் அதன் தலைமை நோக்கத்தைக் கருத்திற் கொண்டு முடிவெடுத்துச் செயற்படுதலோடு, அதன் அங்கங்களாகிய மாணவர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள், நிதியுதவி நல்கும் நிறுவனங்களுக்கு மட்டுமன்றி, ஒட்டுமொத்தமாகச் சமுதாயத்திற்கும், அரசுக்கும் பொறுப்புடன் விளங்குமாறு தன்னை வழிநடத்தும் அதே நேரத்தில் நேரிய முறையில் மக்களாட்சி நெறியில் சீரிய முடிவுகள் எடுத்து அவற்றின்வழிச் செயற்படல்.

- தேசிய அளவிலும் உலக அளவிலும் ஏற்படும் அறிவு நிலை மாற்றங்களை அறிந்து கொள்வதில் முன்னிலை வகித்தல்.

ஒவ்வொரு குடிமகனுக்கும் பின்வரும் உரிமைகள் உள்ளன எனச் சென்னைப் பல்கலைக்கழகம் உணர்ந்து கொண்டுள்ளது:

1. தகவல் அறிவிக்கப்படும் உரிமை
2. தெரிவு செய்யும் உரிமை
3. கருத்துக் கேட்கப்படும் உரிமை
4. குறையினை முறையிடும் உரிமை
5. ஆரோக்கியமான சூழலுக்கான உரிமை
6. உயர்கல்வி பெறும் உரிமை

மேற்குறித்தவற்றின் அடிப்படையில், 1998-99 கல்வி ஆண்டு முதல் தொடர்ந்து நடைமுறைப்படுத்தவும், மக்கள் உரிமைகளை வலுப்படுத்தவும் சென்னைப் பல்கலைக்கழகம் பின்வரும் மக்கள் உரிமைகளை இனங் கண்டுள்ளன. இவை, பல்கலைக்கழகத் துறைகளில் உடனடியாகவும், இணைப்புக் கல்லூரிகளில் அதன்பின்னும் நடைமுறைப்படுத்த உள்ளன.

1. பட்டமேற்படிப்பு

எல்லாப் பட்ட மேற்படிப்புப் பிரிவுகளிலும், இவற்றை நடத்தும் துறைகளிலும் படிப்புப் பிரிவு ஒவ்வொன்றின் நோக்கம், பரப்பு, பணிவாய்ப்பு முதலிய தகவல்கள் ஒவ்வொரு கல்வியாண்டும் தொடங்கும் முன்பே பொதுமக்களுக்கு அளிக்கப்படல் வேண்டும்.

நுழைவுத் தேர்வு, தேவைப்படும் தகுதிகள், ஒவ்வொரு துறையிலும் இருக்கும் இடங்களின் எண்ணிக்கை, தமிழ்நாடு அரசு வகுத்துள்ள இட ஒதுக்கீட்டுக் கொள்கை முதலிய மாணவர் சேர்க்கைக்குரிய தகவல்கள் முதன்மையான நாளேடுகள் அனைத்திலும் தக்க விளம்பரத்தின் வாயிலாக முன்கூட்டியே பொதுமக்களுக்கு வழங்குதல் வேண்டும். விளையாட்டு, நுண்கலைகள், உடல் ஊனம், தேசிய மாணவர் படை, முன்னாள் இராணுவத்தினர் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றோர் போன்ற அரசு வரையறைக்குட்பட்ட குறிப்பிட்ட சிறப்பு இனத்திற்கான இட ஒதுக்கீடு பற்றிய தகவல்களும் மாணவர் சேர்க்கை முறைமையின் போது பொது மக்களுக்கு வழங்கப் படுதல் வேண்டும்.

ஆசிரியர்களது சிறப்பு ஆய்வுப் புலங்கள், தேசிய அளவில் அல்லது உலக அளவில் அறியப்பட்ட பயிற்சிக் கூடங்கள் உள்ளமை, வளர்ந்து வரும் புதிய துறைகள், முனைப்பாக வளர்க்கப்படும் துறைகள், பன்னாட்டுக் கூட்டிணைவு வசதிகள், பன்னாட்டு மாணவர் பரிமாற்ற முறை, தொழிற்சாலைகள், தேசியப் பயிற்சிக் கூடங்கள், ஆய்வு நிறுவனங்கள் இவற்றுடன் பிணைந்த சிறப்பு வசதிகள் குறித்த தகவல்கள் பல்கலைக்கழகத்தின் பல்வேறு படிப்புகளுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கையில் அவர்களுக்கு அளிக்கப்படுதல் வேணடும். மேலும், புள்ளிசார் படிப்பு முறை, அவர்களது விருப்பத்திற்கேற்பப் பாடத்தைத் தேர்ந்[illegible]ப்பு, ஆசிரிய நெறியாளர் வாயிலாக வழங்கப் [illegible], ஆசிரியர்-பெற்றோர் கருத்துப் பரிமாற்ற

227037
சென்னை-600 008

முறை ஆகியன குறித்த தகவல்களும் மாணவர் சேர்க்கையின்போது பொதுமக்களுக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

2. ஆராய்ச்சி

எம்.பில். (முழுநேரம்/பகுதிநேரம்), பிஎச்.டி. (முழுநேரம்/பகுதிநேரம்), பட்டத்திற்காக ஆராய்ச்சி புரிய வாய்ப்பு உள்ள துறைகளின் பெயர், இருதுறை அல்லது பல துறைக் கலப்புப் பொருள்களில் ஆராய்ச்சி புரிய வாய்ப்பு உள்ளமை, சிறப்பு ஆய்வுப்புலங்கள், வழிப்படுத்தும் மேற்பார்வையாளர்கள், அவர்களது ஈடுபாட்டுத்துறைகள், இடங்களின் எண்ணிக்கை, சேர்க்கை முறைகள், நுழைவுத் தேர்வு, மாணவர் தேர்ந் தெடுக்கும் முறை முதலியன பற்றிய தகவல்கள் ஒவ்வோர் ஆண்டும் சனவரி, சூலை மாதங்களில் செய்தித்தாள் விளம்பரம் வாயிலாகப் பொதுமக்களுக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

மாணவர் பரிமாற்ற முறையில் இங்கு வரும் அயல் நாட்டு மாணவர்கள், ஆய்வுபுரிய விழையும் ஆசிரியர்கள், ஆய்வுத்திட்டங்களில் பணிபுரிவோர், நிதியுதவி நல்கும் நிறுவனங்களில் நேர்முகமாக உதவித்தொகை பெறுவோர் இவர்கள் அனைவரும் ஆண்டு முழுவதிலும் பிஎச்.டி. பட்டத்திற்குப் பதிவு செய்ய வசதி அளிக்கப்படுதல் வேண்டும்.

மாணவர்கள் தங்கள் விருப்பம் போல் சுதந்திரமாகத் தங்கள் ஆய்வுத் துறையைத் தேர்ந்தேடுக்க உதவும் வகையில் வளர்ந்து வரும் புதிய ஆய்வுத் துறைகள், முனைப்பாக வளர்க்கப்படும் துறைகள், இன்றைய சமூகத்திற்கு அவற்றின் பொருத்தம், பணிவாய்ப்பு முதலியன குறித்த தகவல்கள் அவர்களுக்கு முன்கூட்டியே அளிக்கப்படுதல் வேண்டும்.

3. மாணவர் நலன்கள்

பின்வரும் தகவல்கள் மாணவர்களுக்கும் பெற்றோர்க்கும் அளிக்கப் படுதல் வேண்டும்:

1. கால முறையிலான மாணவர் முன்னேற்றம்
2. நிதியுதவி புரியும் நிறுவனங்கள் உள்ளிட்ட நிதி வசதிகளும் உதவிகளும்
3. விடுதி வசதிகள்
4. பல்கலைக்கழக மாணவர் வசதி மையம்
5. பல்கலைக்கழகத்தின் பல்வேறு வளாகங்களில் நூலக வசதி
6. பல்கலைக்கழக மாணவர் அறிவுரைக் குழு
7. பல்கலைக்கழகத்தில் ஆதிதிராவிடர்-பழங்குடியினர் மையத்தின் பங்கு
8. மருத்துவ வசதி
9. தகவல்தள வசதியும் படியெடுப்பு வசதியும்
10. படிப்புத் தொடர்பான அறிவுரை நல்கி வழிகாட்டும் வசதியும் பணி வாய்ப்பும்
11. இணைக் கல்வி மற்றும் புறக் கல்வி நிகழ்ச்சிகள்.

4. பல்கலைக்கழகத் தேர்வுமுறையில் வெளிப்படை நிலை

தேர்வு வகை, வினாத்தாள் முறைமை, தேர்வு அட்டவணை, தேர்வு நிகழிடம், நிகழ்நேரம், முடிவு வெளியாகும் நாள் முதலிய தகவல்கள் பொதுமக்களுக்கு முன்கூட்டியே அளிக்கப்படுதல் வேண்டும்.

தேர்வு முடிவு வெளியானபின் உரிய காலத்தில், ஒவ்வொரு மாணவரும் தனக்கு உரிய மதிப்பெண் வழங்கப்படவில்லை எனக் கருதினால், அதனை மறுபரிசீலனைக்கு உட்படுத்தி உரிய மதிப்பெண் பெற உரிமையுடையவராதல் வேண்டும். இவ்வாறு மறு மதிப்பீட்டுக்கு உட்படுத்தல், மதிப்பெண் பட்டியல் பெறல், தற்காலிகப்பட்டச் சான்றிதழ் பெறல், பட்டமளிப்பு விழாவில் நேர்முகமாகவோ அஞ்சல்வழியாகவோ பட்டம் பெறல் ஆகியனவற்றுக்கு உரிமை படைத்தவராதல் வேண்டும்.

இவ்வாறே, தேர்ச்சி பெறாத மாணவர் அடுத்துவரும் தேர்வு எழுதித் தேர்ச்சி பெறுதற்கு ஏதுவாக, தேர்வுக்கால அட்டவணையோடு, தேர்வுக்கட்டண விகிதம் பற்றிய தகவலும் மாணவர்களுக்கு முன்கூட்டியே அளிக்கப்படுதல் வேண்டும்.

5. பல்கலைக்கழக ஆட்சிமுறை

பல்கலைக்கழகத்தில் உயர்கல்விமுறை எங்ஙனம் செயலாக்கம் பெறுகிறது என்பதனைப் பொதுமக்கள் அறியும் வண்ணம் பேரவை, ஆட்சி மன்றம், கல்வி அவை, பாடத்திட்டக்குழு, ஆய்வுத் திட்டக்குழு முதலிய பல்வேறு கல்வி, ஆட்சியமைப்புக்கள் குறித்தும் அவற்றின் செயல்முறைகள் குறித்தும் தகவல்கள் அறியும் உரிமை ஒவ்வொரு குடிமகனுக்கும் இருத்தல் வேண்டும். தமது குறைகளைப் போக்குமாறு முறையிடும் உரிமையும் ஒவ்வொரு குடிமகனுக்கும் இருத்தல் வேண்டும். அன்றியும், இத்தகு முறையீடுகளுக்குச் சற்றொப்ப இருவாரக் கால எல்லைக்குள் பல்கலைக்கழகத்திலிருந்து விடைமடல் பெறவும் ஒவ்வொரு குடிமகனும் உரிமை படைத்தவராதல் வேண்டும்.

பதிவாளர், தேர்வாணையர், வளாக இயக்குநர்கள், பள்ளி இயக்குநர்கள், ஆய்வு, கல்வி, மாணவர், பல்கலைக்கழகம் - தொழிற் சாலைக் கூட்டிணைவுத் தொடர்பான புலத் தலைவர்கள் ஆகியோரது பங்குபணிகள் பற்றிய தகவல் பொதுமக்களுக்கு அளிக்கப்படுதல் வேண்டும். ஏனெனில் உயர்கல்வியில் தக்க இடங்களில் தங்களது குறைகளுக்கும் சிக்கல்களுக்கும் அவர்கள் தீர்வுகாண இயலும்.

6. தொலைக் கல்வியும் விரிவாக்கப் பணிகளும்

அஞ்சல்வழிக் கல்வி நிறுவனம், வயதுவந்தோர் மற்றும் தொடர் கல்வித் துறை, கல்விப்பணியாளர் கல்லூரி, பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் பகுதிநேரச் சான்றிதழ், பெருஞ்சான்றிதழ்ப் படிப்புப்

பிரிவுகள் ஆகியன பற்றிய தகவல்கள் பொதுமக்களுக்கு அளிக்கப்படல் வேண்டும்.

7. கருத்துரைப் பணிகள்

பல்கலைக்கழகத் துறைகளில் உள்ள கருத்துரைவளம், வசதிகள் பற்றிய தகவல்கள் பொதுமக்களுக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

8. பால் சமத்துவம்

கல்வி, ஆராய்ச்சி, பணி வாய்ப்புகளில் பல்கலைக்கழகம், பால் வேறுபாடின்றி அனைவருக்கும் ஒத்த வாய்ப்பு அளிக்கும்.

மக்கள் உரிமை பேணுவதில் சென்னைப் பல்கலைக்கழகம் ஆற்றி வரும் பணி

1. துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் தலைமை நிருவாகியாவார். இவர், ஆட்சிமன்றம், கல்வி அவை, நிதிக்குழு இவற்றின் அலுவல்வழி உறுப்பினரும் தலைவரும் ஆவார். பல்கலைக்கழகம் மற்றும் இணைப்புக் கல்லூரிகளின் கல்வி, நிருவாகம் பற்றிக் கலந்துரையாடவும், உயர்நிலைக் கொள்கை முடிவெடுத்தலில் உள்ள சிக்கல்களுக்குத் தீர்வுகாணவும் தேவையாயின் பொதுமக்கள் அவரைச் சந்திக்கலாம்.

2. முன்னர்க் குறித்த மாணவர் சேர்க்கை உட்படப் பட்டமேற்படிப்புத் தொடர்பான எல்லாத் தகவல்களையும் பொதுமக்களுக்குக் கல்விப் புலத் தலைவர் அளிப்பார்.

3. முன்னர்க் குறித்த ஆய்வு நிதியுதவி, வளர்ந்துவரும் துறைகள், முனைப்பாக வளர்க்கப்படும் துறைகள், ஆய்வுத்திட்ட வாய்ப்பு, ஆய்வுத் திட்டங்களில் மாணவர்களைப் பணியமர்த்தி ஒருங்கிணைத்தல் பற்றிய தகவல்களை ஆய்வுப்புலத்தலைவர் அளிப்பார்.

4. பல்கலைக்கழக ஆசிரியர்தம் கருத்துரைவளம், பல்கலைக்கழகப் பணிகளில் தொழிற்சாலைகளின் பங்கு முதலியவற்றைப் பல்கலைக் கழகம் - தொழிற்சாலை உறவுக்கான புலத்தலைவர் ஒருங்கு இணைப்பார்.

5. மாணவர்கள் நலன்கள் குறித்த மேலே சுட்டிய எல்லாச் செயற் பாடுகளையும் மாணவர்களுக்கான புலத்தலைவர் கவனித்துக் கொள்வார்.

6. பல்கலைக்கழக மாணவர் கருத்துரைக்குழு, மாணவர்களது படிப்புத் தொடர்பான வழிகாட்டுதலை அளித்து வருவதோடு, போட்டித் தேர்வுகளை வெற்றிகொள்ளப் பயிற்சி வகுப்புக்களையும் நடத்தி வருகிறது. நமது நாட்டிலும் அயல் நாட்டிலும் பணிபெறத் தேவைப்படும் சான்றிதழ்களில் இக்குழுவின் செயலர் மேலொப்பமும்

இட்டு வருகிறார். மேலும், அயல்நாட்டு மாணவர்களுக்கு வழிகாட்டும் மையமாகத் திகழ்ந்து பல்கலைக்கழகத் துறைகள் அளித்துவரும் படிப்புப் பிரிவுகளில் சேருதற்கான உதவிகளையும் நல்கி வருகிறது.

7. சேத்துப்பட்டில் விளையாட்டுக்கென அக அரங்கங்களும் புற அரங்கங்களும் உள்ளன. உடற்கல்வியியல் துறை இயக்குநர் மாநில அளவிலும் தேசிய அளவிலும் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் அணி தேர்வு செய்தல் தொடர்பான தகவல்களை இணைப்புக் கல்லூரி மாணவர்களுக்கு அளித்து வருகிறார்.

8. இணைப்புக் கல்லூரிகள் பெரும்பாலானவற்றில் நாட்டு நலப்பணித் திட்டம் உள்ளது. இவற்றைப் பல்கலைக்கழகத்தில் உள்ள நாட்டு நலப் பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் கவனித்து வருகிறார்.

9. உசாவல்/தகவல் அலுவலகம் வாயிலாக இப்போது பொதுமக்களின் குறை முறையீடுகள் கவனிக்கப்படுகின்றன. எனினும், இதனை விரைவுப்படுத்திடப் பல்கலைக்கழகம் தனியே குறைதீர்க்கும் பிரிவு ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுத்துவருகிறது.

10. தேர்வு முறைகளில் வெளிப்படைநிலை இருக்குமாறு இப்போது தேர்வாணையர் பார்த்துக் கொள்கிறார். பட்டப்படிப்பு மாணவர்கள் ஒவ்வோராண்டும் எல்லாத் தாள்களுக்கும் மதிப்பெண் மறு கூட்டல் செய்யப்பட வசதியளிக்கப்பட்டுள்ளது. எனினும், இறுதி ஆண்டில் மட்டும் மறுமதிப்பீடு செய்யப்படப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு வசதியளிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகம் மறுமதிப்பீட்டுக்காகத் தேர்வாணையர். பல்கலைக்கழகப் பேராசிரியர்களைக் கொண்ட குழுவின் மேற்பார்வையில் தனியே ஒரு பிரிவை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

11. பல்வேறு படிப்புப்பிரிவுகளுக்கான பாடத்திட்டங்கள், தகவல் ஏடு, ஆய்வு நூல்கள் முதலியவற்றைப் பல்கலைக்கழகப் பதிப்புத் துறை வெளியிட்டு வருகிறது.

12. கல்விக் கால அட்டவணை / படிப்புப்பிரிவுத்தகவல் பனுவல உருவாக்கப்பட்டு வருகிறது. இது சூன் 1998 இல் வெளிவரவுள்ளது. கணினி இணையம் மற்றும் பின்னல் வசதியுடன் கூடிய தகவல் பிரிவு வாயிலாக உடனடித்தகவல்களை மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் அளிக்கத் திட்டமிட்டப்பட்டுள்ளது.

13. மருத்துவமையம் சிறிய அளவில் தொடங்கப்பட்டுள்ளது. இது முழுமையான உடல் நல மையமாக விரைவில் விரிவுபடுத்தப்படும்.

14. மாணவர்களுக்கு ஆரோக்கியமான சூழல் அமையும் பொருட்டுப் பல்கலைக்கழகக் கட்டடங்கள், விடுதிகள் புதுப்பிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

UNIVERSITY OF MADRAS
CITIZENS CHARTER

Preamble : The University of Madras, being the mother University in Tamilnadu, has 69 Teaching and Research departments, 106 Arts and Science Colleges, 44 Professional Colleges, 8 Education Colleges, 7 Oriental Training Institutes, 1 Physical Education College, 24 Research Institutes and 1 Post-Graduate Extension Centre. Its policy strands are :

- Keep furtherance of knowledge in the various disciplines and subjects as its primary goal.
- In the search for new knowledge, encourage and support continuously (a) socially relevant education (b) improvement of the quality of education and (c) an equitable access to all sections of the society to higher education.
- Provide leadership in higher education to its affiliated colleges and encourage, support and wherever necessary, regulate them to adhere to established norms in conducting courses of study as well as other related matters.
- Take holistic decisions and actions by bearing in mind its primary goal and remain accountable to the students, teachers, employees, funding agencies the society as a whole and the government and be dictated by a democratic process moderated by rectitude.
- Be responsive to the changes in the frontiers of knowledge, nationally and internationally.

The University of Madras recognizes that every citizen has the following rights :

a) The right to be informed
b) The right to choose
c) The right to be heard
d) The right for redressal
e) The right to healthy environment
f) The right to have access to higher education.

On the basis of the above, the University has identified the following charter of rights for strengthening and implementing the same from the year 1998-99 and thereafter. These charters are to be adopted by the departments of the University forthwith and thereafter by the affiliated colleges.

1. Post-Graduate Programmes in Higher Education : All the post graduate courses and the departments which offer these courses shall provide the objectives, scope and job opportunities of these courses to the public well before the beginning of every academic year.

The admission requirements such as entrance examination, minimum qualifications needed, number of seats available in each department, policy of reservation as stipulated by the Government of Tamilnadu shall be brought to the notice of the public by appropriate advertisement in the leading newspapers. The reservation of seats for the specified categories such as Sports, Fine arts, Physically handicapped, NCC, Ex-service and Defence personnel and freedom

fighters, etc., as per the government notification shall be made known to the public at the time of selection process.

The details regarding the specialization of faculty members, nationally or internationally known lab facilities available, emerging and thrust areas, international collaboration facilities, international exchange of students and specialised tie up facilities with Industry, National labs and research institutes shall be provided to the students by the departments at the time of application to various courses in the University.

Further, in the credit based programmes, opportunity for students to select their own programmes, individual guidance from the faculty advisors and the availability of teacher parent interaction programme shall be made known to the public at the time of admission.

2. Research Programmes : The departments which offer M.Phil (full time and part time), Ph.D. programme (full time and part time), including interdisciplinary and multidisciplinary research facilities, areas of specialization, available supervisors and their field of interest, number of vacancies in each department for undergoing these courses, admission details, entrance test and mode of selection shall be made available to the public through advertisement in the news papers in January and July of every calendar year.

The registration for Ph.D. shall be provided throughout the year to all scholarship holders either directly awarded by the funding agencies or those who work in the research projects or teacher candidates or International students who come under exchange programmes.

The emerging and thrust areas of research and its relevance to the needs of the modern society, professional placement etc. shall be made known to the candidate, well in advance so as to provide full freedom to select the research area of his / her choice.

3. Students Welfare : Students and parents shall be provided with the following information (a) periodic progress of the student, (b) funding facilities and services, including the availability of funds from various agencies, (c) availability of hostel accommodation, (d) availability of University students' amenities centre, (e) library facilities in various campuses of the University, (f) facilitiies extended by the students advisory bureau, (g) role of SC and ST cell in the University system, (h) availability of health centre facilities, (i) accessibility of information base / data base and reprographic facilities, (j) counselling service for career guidance and placement (k) availability of cocurricular and extracurricular activities.

4. Transparency in the University Examination System : The type of examination, pattern of question papers, the scheduled date of conduct of examination during the various phases of the academic year, places of examination, the probable date of publication of results shall be made known to the public well in advance.

Every student shall have the right to know the method of improving his / her performance, review of marks by means of revaluation and obtaining the mark lists, provisional certificate, well in time after the publications of results and the method of obtaining the degree through the convocation by presence or in absentia. The students and parents

shall be provided the information about rank placements, prizes and awards available to them.

The examination fee structure shall be made known well in advance along with the examination time table of the calendar year.

5. University Administration : Every citizen shall have the right to know about the functions of the various administrative and academic bodies (like Senate, Syndicate, Academic Council, Board of Studies, Board of Research Studies).

Citizen shall have the right to represent their grievances for which the University shall provide a reply in about two weeks time.

The role of the Registrar, Controller of Examinations, Director of the campuses, and schools, Deans of research, academic, students and University - Industry interaction shall be made known to the public to mitigate the problems / issues in the related areas of higher education.

6. Distance Education and Extension services : The public shall be provided with details of the activities of Insitute of Correspondence Education, Adult and Continuing Education, Academic Staff College and the availability of part time diploma / certificate courses of the University departments.

7. Consultancy Services : The public shall be provided with the details of the consultancy potentials available with the University departments and its facilities.

8. Gender Equality : The University shall provide equal opportunity to the scholars irrespective of gender in education, research and employment opportunities.

How the University of Madras has organised itself to address the Citizens Charter :

1. The Vice-Chancellor is the principal executive officer of the University. He is a member ex-officio and Chairman of the Syndicate, the Academic Council and the Finance Committee. He is available for discussion, if necessary, on any academic and administrative matter of the University and affiliated collages and solving problems which require higher level policy decision.

2. Dean (Academic) will to provide all information relating to post-graduate programmes including admission indicated in the above list relating to citizens rights.

3. Dean (Research Programme) will provide information on research funding, emerging thrust areas of research, opportunity for research projects, coordinating the probable employment of students for research projects etc. as delineated in the citizens charter.

4. The details of the consultancy potentials of the University faculty and industries participation in the University programmes shall be coordinated by the Dean (Industrial Consultancy).

5. Dean (students) will look after all students welfare activities enlisted in the citizens charter.

6. The University Students Advisory Bureau (USAB) has also been involving in students career guidance and arrangements of coaching classes. It also provides the necessary attestation for various transcripts needed for higher education in India and abroad. Further, it serves as Foreign Students Advisory Bureau and helps other nationals to join courses offered by the Departments of University.

7. As regards the sports, Madras University Union at Chetput has indoor and outdoor auditoriums. The selection of teams

for state level and national level competitions for the students of affiliated colleges is done by the Director of the Madras University Union.

8. Most of the affiliated colleges to the University of Madras have their NSS units and they are looked after by the co-ordinator, NSS, University of Madras.

9. At present all public grievances are being looked into by the Enquiry / Information Office. However, the University is in the process of establishing a separate grievance cell to quicken up the process.

10. At present, the Controller of Examinations takes care of the transparency in examination system. Facility is available for under-graduate candidates to apply for re-totaling of marks for all the papers in all the years. However, the revaluation facility is available only for the final semester / year under-graduate candidates. The University is planning to establish a separate cell for revaluation, under the supervision of a high level committee of University professors and the Controller of Examinations.

11. The Publications Division of the University brings out syllabi for various courses, prospectus and other information materials besides research publications and books.

12. An academic calendar / course book of the University is under way to be released by June 1998. An information cell with computerised networking and internet facilities is being planned for online information to the public and students.

13. A Medical Care System which will shortly be developed into a full fledged health centre is in the offing.

14. The University buildings and hostels are being renovated thereby creating a very healthy environment for the benefit of the students.

227037
-600 008

அடிப்படை மருத்துவ

DOCTRINA VIM PROMOVET INSITAM